ST. Johns Matric Hr Sec School

+2 Commerce Public Model Exam

12th Standard

Date : 11-Jan-19

**வணிகவியல்**

Reg.No. : | | | | | |

Time : 02:30:00 Hrs

Total Marks : 90

**பகுதி-1**

20 x 1 = 20

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:

1) கூட்டுறவு அமைப்பில்

(a) 'ஒரு பங்கு ஒரு வாக்கு ' -முறை கடைப்பிடிக்கப்படுகிறது

(b) 'ஒரு நபர் ஒரு வாக்கு ' -முறை கடைப்பிடிக்கப்படுகிறது

(c) ஒரு நபருக்கு இரு வாக்குரிமைகள் உண்டு (d) பங்குகள் மாற்றியல்பு தன்மை கொண்டுடவை.

2) இந்துக் கூட்டுக குடும்ப வணிக முறையில் குடும்ப உறுப்பினர்கள்____ என்று அழைக்கப்படுகிறார்கள்

(a) கர்த்தா (b) கூட்டாளிகள் (c) கூட்டு வாரிசுதாரர் (d) இவற்றில் எதுவுமில்லை

3) பொதுத்துறை நிறுவனங்களின் நோக்கம்______

(a) பொது மக்களுக்கு சேவை புரிவது (b) பொது மக்களுக்கு வருவாய் அளப்பது

(c) வேலை வாய்ப்பளித்து (d) இவை அனைத்தும்

4) தனியாள் வணிகரின் பொறுப்பு

(a) முதலுக்கு ஏற்ப வரையறுக்கப்பட்டது (b) சொத்துக்கு ஏற்ப வரையறுக்கப்பட்டது

(c) வரையறையில்லாதது

5) தனியாள் வணிகத்தில் உரிமையாளரின் _____ வரையறுக்கப்படாதது ஆகும்

(a) பொறுப்பு (b) சொத்து (c) முதல் (d) இவை எதுவுமில்லை

6) கூட்டாண்மையின் அடிப்படைக் கூறு

(a) பூரண நல்ல நம்பிக்கை (b) முதலீட்டிற்கான தொகை இருத்தல்

(c) கூடி தொழில் செய்ய விருப்பம்

7) இந்தியாவில் ______ ம் ஆண்டு கூட்டாண்மைச் சட்டம் இயற்றப்பட்டது.

(a) 1904 (b) 1907 (c) 1932 (d) 1956

8) ______ என்பது தற்காலிகமாக ஏற்படுத்தப்பட்ட கூட்டாண்மையாகும்.

(a) விருப்பமுறிக் கூட்டாண்மை (b) குறிப்பிட்ட கூட்டாண்மை (c) இணைவினை

(d) வரையறுத்த கூட்டாண்மை

9) பங்குகளை வட்டத்தில் (தள்ளுபடி) வெளியிட்டிருக்கும் பொழுது, பங்கொன்றின் முகமதிப்பு ரூ.100 எனில் ,அனுமதிக்கப்படும் உயர்ந்தளவு வட்டம்

(a) ரூ. 5 (b) ரூ.10 (c) ரூ. 20 (d) ரூ.15

10) இந்தியாவில் கீழ்க்கண்ட நிறுமங்களில் எதனை தொடங்க இயலாது?

(a) பதிவு செய்யப்பட்ட நிறுமங்கள் (b) பதிவு செய்யப்படாத நிறுமங்கள் (c) சட்டமுறை நிறுமங்கள்

(d) இவை எதுவுமில்லை

11) ___________எண்ணிக்கைக்கு மிகாத பொதுவரையறு நிறுமங்களில் ஒரே நேரத்தில் ஒரு நபர் இயக்குநர் பதவி வகிக்கலாம்.

(a) 10 (b) 15 (c) 20 (d) வரம்பில்லை

12) கூடுதல் இயக்குநர்கள் மற்றும் மாற்று இயக்குனர்களை நியமிப்பது

(a) மைய அரசு (b) மாநில அரசு (c) இயக்குநரவை (d) இவை ஏதுமில்லை

13) ____மாதங்களுக்கு ஒரு முறையேனும் அவைக்கூட்டம் கூட்டப்பட வேண்டும்

(a) மூன்று (b) ஆறு (c) ஒன்பது (d) பத்து

14) இது புதிய நிறுமங்களின் முதல் விடுப்புகளை வெளியிடும்.

(a) முதன்மைச் சந்தை (b) இரண்டாம் நிலை சந்தை (c) பொருட்கள் சந்தை
(d) ஒழுங்குமுறை விற்பனை சந்தை

15) தங்கள் சேமிப்பை இலாபகரமாக, வருவாயை ஈட்டித் தரும் பத்திரங்களில் முதலீடு செய்வதற்காகப் பத்திரங்களை வாங்குபவர்கள் ______________ என்று அழைக்கப்படுகின்றனர்.
(a) முதலீட்டாளர்கள் (b) ஊக வணிகர்கள் (c) தன் வணிகர்கள் (d) மேலாண்மைத் தரகர்கள்

16) முதன் முதலில் நுகர்வோர் கூட்டுறவு வெற்றிகரமாக விளங்கிய நாடு
(a) இங்கிலாந்து (b) அமெரிக்க (c) சுவிஸ் (d) இந்தியா

17) ........... ஊரக நாணய சங்கங்கள் அல்லது பிரதம நாணயச் சங்கங்கள் என்று அழைக்கப்படுகின்றன
(a) வேளாண்மை கடன் சங்கங்கள் (b) வேளாண்மை சாரா கடன் சங்கங்கள்
(c) வேளாண்மை கடன் சாரா சங்கங்கள் (d) வேளாண்மை சாரா கடன் சாரா சங்கங்கள்

18) கூட்டுறவில் உறுப்பினர்கள் _____ அளவிற்கு அவரின் பொறுப்பு பெரும்பாலும் வரையறுத்தாக இருக்கும்.
(a) முதல் (b) கடன் (c) பங்கு முதல் (d) இவை எதுவுமில்லை

19) அரசுத் தொழில்கள் மிகச் செம்மையாக இயங்குவதற்கு மிகவும் உகந்தது எனப் பொதுவாகக் கருதப்படும் வடிவமைப்பு
(a) துறைவாரி அமைப்பாகும் (b) பொதுக் கழகமாகும் (c) அரசு நிறுமமாகும்
(d) கூட்டுப் பங்கு நிறுமமாகும்

20) தமிழ்நாடு சிறுதொழில் நிறுமம் (டான்சி ) _____ அமைப்புக்கு எடுத்துக்காட்டு
(a) கூட்டுப் பாங்கு நிறுமம் (b) கூட்டுறவுச் சங்கம் (c) அரசு துறைவாரி (d) பொதுக்கழகம்

## பகுதி-2

7 x 2 = 14

எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளி. **வினா எண் 21 க்கு** கட்டாயம் விடையளிக்க வேண்டும்.

21) பொதுக் கூட்டுரு என்றால் என்ன ?
22) 'வியாபாரம்' (Business) என்பதன் பொருள் தருக.
23) தனியாள் வணிகத்தில் விற்பனை அதிகரிக்க காரணமாய் அமைவது எது?
24) கூட்டாண்மையைக் கலைப்பது எவ்வாறு எளிதான செயலாகும்?
25) 'நிறுமம் தோற்றுவிப்பு ' ( Promotion ) என்றால் நீவிர் அறிவது யாது ?
26) அமைப்பு முறையேட்டின் உள்ளடக்கம் யாது?
27) 'நிகழ்ச்சி நிரல்' என்றால் என்ன?
28) "முன்னோக்கிய கொடுப்பு ஒப்பந்தம் "(Forward Delivery Contracts ) என்றால் என்ன ?
29) கூட்டுறவுச் சங்கத்தின் ஏதேனும் நான்கு சிறப்பியல்புகளைக் கூறுக.
30) அரசு,தொழில்களின் தகுந்த வடிவத்தைத் தேர்ந்தெடுப்பது எவ்வாறு ?

## பகுதி-3

7 x 3 = 21

எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளி. **வினா எண் 31 க்கு** கட்டாயம் விடையளிக்க வேண்டும்.

31) எந்த காரணங்களுக்காக அமைப்புப் பற்றி படிப்பது முக்கியத்துவம் வாய்ந்தது ?
32) இன்றைய உலகில் பன்னாட்டு நிறுமங்களின் செயல்பாடுகளை விவரி.
33) தனியாள் வணிகத்திற்கு ஏற்ற தொழில்களை விவரி.
34) கூட்டாளிகளின் பல்வேறு வகைகளை விவரி.
35) பங்குதாரர்களின் எண்ணிக்கை அடிப்படையில் நிறுமத்தை எத்தனை வகைகளாகப் பிரிக்கலாம்? அவை யாவை?
36) பங்குச் சான்றிதழ் - குறிப்பு வரைக.
37) இயக்குநரின் தகுதியின்மைகள் யாவை ?
38) முதலீட்டாளர், ஊக வணிகர் இவர்களுக்கிடையே உள்ள வேறுபாடுகள் யாவை?
39) வேளாண்மை சாரா கடன் சங்கங்களின் வகைகளை விவரி
40) துறைவாரி அமைப்பின் இயல்புகளை விவரி .

## பகுதி-4

7 x 5 = 35

அனைத்து வினாக்களுக்கும் விடையளி :

41) a) அரசு நிறுவனங்களின் வகைகளை எழுதி விளக்குக

**(OR)**

b) தனிநபர் கட்டுப்பாடு உலகிலேயே சிறந்தது. விவரி.

42) a) கூட்டாண்மையின் சிறப்புக் கூறுகளை விவரி .

**(OR)**

b) பலவகையான பங்குகள் பற்றி விளக்குக

43) a) கூட்டாண்மை , தனியாள் வாணிகம் - ஒப்பு நோக்குக?

**(OR)**

b) நேர்மைப் பங்குகள் என்றால் என்ன?அவற்றின் சிறப்புத் தன்மைகளை எழுதுக.

44) a) குறிப்பு வரைக

1.மாற்ற இயலா முன்னுரிமைப் பங்குகள்

2.மீள்தகு முன்னுரிமைப் பங்குகள்

3.மீட்க இயலா முன்னுரிமைப் பங்குகள்.

**(OR)**

b) விளக்கக் குறிப்பு வரைக: அ.ஆண்டுப் பொதுக் கூட்டம் ஆ.இயக்குநர் அவை கூட்டம் இ.சிறப்புப் பொதுக் கூட்டம்

45) a) ஒரு நிறுமச் செயலரின் சட்ட முறைக் கடமைகளைக் மற்றும் பொதுக் கடமைகளை எழுதுக

**(OR)**

b) இயங்குநர்களின் பொறுப்புகளை விவரிக்க

46) a) கூட்டுறவு அமைப்பின் முக்கிய சிறப்பியல்புகளைக் சுருக்கமாக வரைக.

**(OR)**

b) நாணயம் சாரா கூட்டுறவுச் சங்கங்களை விவரி.

47) a) அரசுத் தொழில்களின் நோக்கங்களை விவரி .

**(OR)**

b) பொதுக் கழகத்தின் இயல்புகளையும், நிறைகுறைகளையும் விளக்குக.

****************************************